DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, ATTUR.**

| | | |
|---|---|---|
| CC. / STC. / MC./ DVC. No | : | **CC. 140/2023** |
| Miscellaneous | : | - |

Deposition of **PW - 1 Witness for Prosecution**

| | | |
|---|---|---|
| Name | : | திரு. அழகுதுரை |
| Father's Name | : | திரு. முத்துசாமி |
| Village | : | ஏத்தாப்பூர் |
| Taluk | : | பெத்தநாயக்கன்பாளையம் |
| Calling | : | விவசாயம் |
| Age | : | 74 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **10.06.2024.** **துவக்க நேரம்** 03.50

1) நான் தற்சமயம் ஏத்தாப்பூரில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். எதிரி அய்யனார் எனது மகன், எதிரி ராதா எனது மருமகள் ஆவார்கள்.

2) சுமார் 1 வருடத்திற்கு முன்பு ஒருநாள் மதியம் 02.00 மணியளவில் நான் காட்டில் இருந்தேன். எனது மகன் அய்யனாரும் அவரது மனைவி ராதாவும் என்னிடம் வந்து தண்ணி எடுக்கவந்தது தொடர்பாகவும், எவ்வளவு கடன் கட்டியது தொடர்பாகவும் வாக்குவாதம் ஏற்பட்டு, அய்யனார் தடியை எடுத்துவந்து எனது இடது காது, வலது கை, வலது முழங்கை, இடதுகால் ஆகிய இடங்களில் சரமாரியாக அடித்தார்.

3) அதனால் எனது இடது காதில் 5 தையலும், இடது காலில் 3 தையலும், வலது கை முழங்கையில் காயமும், வலது கை பெருவிரல் ஒடிந்தும்விட்டது. அதன்பிறகு பெத்தநாயக்கன்பாளையம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வந்தேன். அப்பொழுது ஏத்தாப்பூர் போலீசார் வந்து என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். பிறகு மேல் சிகிச்சைக்காக என்னை சேலம் அனுப்பிவிட்டார். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **(புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** இது சம்மந்தமாக போலீசார்ல என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை - இல்லை**

**மறுவிசாரணை -** இல்லை

முடிவு நேரம் 04.00

Taken Down by me in Open Court Read over to the depondant in the presence of the accused and admitted by the deponant to be correct

Sd/-S. Munusamy B.Sc., B.L.,
Judicial Magistrate No.1,
Attur.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, ATTUR.**

| | | |
|---|---|---|
| CC. / STC. / MC./ DVC. No | : | **CC. 140/2023** |
| Miscellaneous | : | - |

Deposition of **PW - 2 Witness for Prosecution**

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி. மல்லிகா |
| Father's Name | : | க/பெ திரு. வெங்கடாலஜம் |
| Village | : | ஏத்தாப்பூர் |
| Taluk | : | பெத்தநாயக்கன்பாளையம் |
| Calling | : | கூலி |
| Age | : | 43 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **10.06.2024.** **துவக்க நேரம்** 04.03

1) நான் தற்சமயம் ஏத்தாப்பூரில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். எதிரி அய்யனார் எனது கொழுந்தனார். எதிரி ராதா கொழுந்தனார் மனைவி ஆவார்கள்.

2) நாங்கள் எல்லம் ஒற்றுமையாகத்தான் இருந்தோம். எனது கொழுந்தனாருக்கு திருமணமானப்பிறகுதான் வீட்டுக்கடன் தொடர்பாக எங்களுக்குள் அடிக்கடி பிரச்சனை வந்தது. அந்த வீட்டை கட்டியது நானும், எனது கணவரும் மற்றும் மாமானாரும்தான். எனது கொழுந்தனார் அந்த வீட்டிற்கு டைல்ஸ், கதவு மட்டும் போட்டார்.

3) எனது மாமனார் சுமார் 1 ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள் மதியம் சுமார் 02.00 மணியளவில் பொது கிணற்றிற்க்கு அருகிலுள்ள தொட்டியில் தண்ணீர் குடித்துவிட்டு, வீட்டிற்கு சென்றுள்ளார். அப்பொழுது எனது கொழுந்தனார் அடித்து, உடல் முழுக்க காயமாக இருந்தது. நாங்கள் தகவல் தெரிந்து சென்று பார்த்தோம். அதன்பிறகு எனது மாமானாரை பெத்தநாய்க்கன்பாளையம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அதன்பிறகு அவரை சேலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை - இல்லை**

**மறுவிசாரணை -** இல்லை

முடிவு நேரம் 04.15

Taken Down by me in Open Court Read over to the depondant in the presence of the accused and admitted by the deponant to be correct

Sd/-S. Munusamy B.Sc., B.L.,
Judicial Magistrate No.1,
Attur.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, ATTUR.**

| | | |
|---|---|---|
| CC. / STC. / MC./ DVC. No | : | **CC. 140/2023** |
| Miscellaneous | : | - |

Deposition of **PW - 3 Witness for Prosecution**

| | | |
|---|---|---|
| Name | : | திரு. லட்சுமணன் |
| Father's Name | : | திரு. கணேசன் |
| Village | : | ஏத்தாப்பூர் |
| Taluk | : | பெத்தநாயக்கன்பாளையம் |
| Calling | : | சைக்கிள்கடை |
| Age | : | 54 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **10.06.2024.** **துவக்க நேரம்** 04.13

1) நான் தற்சமயம் ஏத்தாப்பூரில் வசித்து சைக்கிள் கடை வைத்து வேலை செய்து வருகிறேன். எதிரி, மற்றும் சாட்சிகள் எனது ஊர்க்கார்கள்.

2) அழகுதுரையை எனது அப்பா காலத்தில் இருந்து எனக்கு தெரியும். சுமார் 1 1/2 ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள் நான் கடையில் இருந்தேன். அப்பொழுது அழகுதுரையை, அவரது சின்ன மகன் அய்யனார் அடித்துவிட்டதாக அங்கிருந்து வந்தவர்கள் சொன்னார்கள்.நான் இந்த தகவலை அவரது பெரிய மகன் வெங்கடாஜலத்திற்கு சொன்னேன்.

3) வெங்கடாஜலம் வந்தார். அவருடன் நான் காட்டிற்கு சென்றேன். போலீசார் அங்கு வந்தார்கள். மேப் எல்லாம் போட்டார்கள். கையெழுத்து கேட்டார்கள் போட்டேன். எதற்கு என்று கேட்டேன் இங்குதான் சண்டை நடந்தது என்று சொன்னார்கள். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான் (பார்வை மகஜர் அ.த.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது) என்னுடன் பக்கத்துக்காட்டுக்காரர் தேவகி என்பவர் கையெழுத்து செய்தார். வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை - இல்லை**

Typed by V. Karthi, CC 140/2023 Dated: 10.06.2024

**மறுவிசாரணை** - இல்லை

முடிவு நேரம் 04.20

Taken Down by me in Open Court Read over to the depondant in the presence of the accused and admitted by the deponant to be correct

Sd/-S. Munusamy B.Sc., B.L.,
Judicial Magistrate No.1,
Attur.

Typed by V. Karthi, CC 140/2023 Dated: 10.06.2024